| S–2146 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

### First Semester

### தமிழ்

### இக்கால இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours  Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. வீட்டுக்கு வெளியே வெகுநேரமாய் உட்கார்ந்திருந்தது எது? ஏன்?

2. "போலி உடும்பு"– விளக்கம் தருக.

3. "காலத்தின் விளிம்பில்"– கதைக்கருவினை எழுதுக.

4. "வாழ்க்கை நெருப்பு"– சிறுகதையின் தலைப்பினை விளக்குக.

5. சுந்தரம்பாளின் கணவர் எங்கு சென்றார்?

6. "அளம்" புதினத்தில் இடம்பெறும் கதைமாந்தர்கள் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.

7. மா. கமலவேலனின் நாடகப் படைப்புகள் இரண்டினை எடுத்தியம்புக.

8. சௌந்தரவல்லியின் கோபம் போக்கியவன் யார்? எப்படி?

9. பயணக் கட்டுரைகளின் இன்றியமையாமையினை எழுதுக.

10. ஏ.கே. செட்டியார் பயணித்த ஊர்களுள் உம்மைக் கவர்ந்த இரு ஊர்கள் எவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) 'புழுதி' கவிதை வழியே நா. காமராசன் உணர்த்தும் செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதி காண விரும்பிய மானுடம் என ஈரோடு தமிழன்பன் கூறுவனவற்றைச் சுருக்கி எழுதுக.

12. (அ) இல்லறமேன்மையை புதுமைப்பித்தனின் 'செல்லம்மாள்' வழி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) 'சாசனம்' சிறுகதையின் தலைப்பொருத்தம் எழுதுக.

13. (அ) 'அஞ்சம்மாள்' பாத்திரப்பண்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) 'வடிவாம்பாள் ' அடைந்த துயரினை விளக்குக.

14. (அ) சுசீலாவின் பாத்திரப்படைப்பு 'நடைபாதை நட்சத்திரங்கள்' நாடகத்திற்கு எவ்வாறு வலுசேர்க்கிறது?

(அல்லது)

(ஆ) மா.கமலவேலனின் நாடகங்களில் காணப்படும் மத நல்லிணக்கத்தினைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) கட்டுரை வகைகளுள் பயணக் கட்டுரைகள் பெறுமிடத்தை ஏ.கே. செட்டியாரின் கட்டுரைகள் வழி தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) ஏ.கே. செட்டியாரின் பயண அனுபவங்களை விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

16. புதுக்கவிதைகளின் கருப்பொருள்கள் பெரும்பாலும் சமூக அக்கறை கொண்டுள்ளனவாக அமைந்துள்ளன நிறுவுக.

17. மனித மன உணர்வுகளை உம் பாடப்பகுதியில் உள்ள சிறுகதைகள் வழி புலப்படுத்துக.

18. சமூகச்சிக்கல்கள் 'அளம்' புதினத்தில் எடுத்துரைக்கும் பாங்கினைத் தொகுத்துரைக்க.

19. பெண்கல்வியின் அவசியத்தை 'அழுக்குப் படாத அழகு' வழி தெளிவுறுத்துக.

20. 'சமூகத்தின் பண்பாட்டு விழுமியங்களை பயணக்கட்டுரைகள் பதிவு செய்கின்றன" எனும் கூற்றினை ஆய்க.

| S–2147 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1C2 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2026.

## First Semester

## தமிழ்

## தமிழக வரலாறும் பண்பாடும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours — Maximum : 75 Marks

### பகுதி அ — (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. சிந்துவெளி நாகரிகம் தோன்றிய இரு நகரங்களைச் சுட்டுக.

2. தமிழரின் வரலாற்றுச் தொன்மையினை அறியச் செய்த அகழாய்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

3. தூதர்களுக்கு இருந்த பண்புகளுள் இரண்டினை எடுத்தியம்புக.

4. இளம் வயதிலேயே அரியணை ஏறிய மன்னர் இருவர் பெயர்களைச் சுட்டுக.

5. நாயன்மார்களுள் முதல் மூவர் பெயரினைக் குறிப்பிடுக.

6. ‘சித்திக்காரப்புலி’ - விளக்கம் தருக.

7. சோழர் காலத்தில் ராஜகுருக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

8. சோழர்கால வரிகளுள் இரண்டனை எழுதுக.

9. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் தோற்றம் குறித்தெழுதுக.

10. சி.வை. தா வின் அச்சுப்பதிப்பில் வெளிவந்த முதல் நூல் குறித்தெழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இரும்புக்காலம் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பழந்தமிழர் பிறநாட்டினருடன் கொண்டிருந்த தொடர்பினை சுருக்கியுரைக்க.

12. (அ) களப்பிரர் யார்? எவர்? சான்றுகளுடன் விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) சங்ககால மகளிர்நிலை குறித்து விவரிக்க.

13. (அ) பல்லவர் வரலாற்றினை அவர்தம் நாணயங்கள் வழி விவரித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) பல்லவர் சிற்பங்களின் பொதுக்கூறுகள் குறித்து எழுதுக.

14. (அ) மூவர்கோவில் வழி அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) விஜயாலய சோழிச்சுரத்தின் சிறப்பினை எடுத்துரைக்க.

15. (அ) உ.வே. சாவின் பதிப்புத்துறை பணிகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) சி.வை. தாவின் தமிழ்ப்பணிகளை விளக்கியுரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க.

16. ‘பண்டைத் தமிழரும் வாணிகமும்’ - கட்டுரைக்க.

17. சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் சமூகப் பண்பாட்டுச் செய்திகளை தொகுத்து எழுதுக.

18. ‘பல்லவர்கால சமயமும் பக்தி இயக்கமும் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் புலப்படுத்துக.

19. சோழ மன்னர்களுள் இராசராசசோழன் பெறுமிடம் குறித்து விளக்கியுரைக்க.

20. 19-20 ஆம் நூற்றாண்டு, சமூக எழுச்சிக்காலம் என அழைக்கப்படுவதன் காரணங்களைத் தொகுத்துரைக்க.

———————

| S–2148 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA1 |

**U.G. DEGREE EXAMINATION, APRIL 2026**

**தமிழ்**

**இயைபுப்பாடம் — தமிழரின் மேலாண்மைச் சிந்தனைகள்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours　　　　　　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மேலாண்மை என்றால் என்ன?

2. மேலாண்மையின் முதன்மைப் பணிகளைக் கூறுக.

3. மனித உறவுகளைச் சிதைப்பது எது?

4. பழந்தமிழர்கள் வாழ்க்கையை எவ்வாறு பகுத்தனர்?

5. ஆளுமைத்திறனின் முக்கியக் கூறுகளை எழுதுக.

6. ஆளுமைப் பண்பு மேம்படும் வழிகளைக் கூறுக.

7. தலைமைப் பண்பிற்கான முதல் தகுதி யாது?

8. சிறந்த தலைமைவாதியாகத் திகழ செய்யவேண்டியவை யாவை?

9. நெருக்கடி மேலாண்மை குறித்துக் கூறுக.

10. நெருக்கடிக்கான காரணிகளை எழுதுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மேலாண்மையியல் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மேலாண்மைச் செயல்பாடுகளை விவரிக்க.

12. (அ) உறவு மேலாண்மை என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) பழந்தமிழரின் மேலாண்மைப் பண்புகளை அடையாளப்படுத்துக.

13. (அ) தனி மனித ஆளுமைத் திறனை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளைக் கண்டறிக.

14. (அ) தலைமைப் பண்பை வளர்த்துக் கொள்ளும் வழிமுறைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) திருக்குறள் காட்டும் தலைமைப் பண்புகளை மதிப்பிடுக.

15. (அ) நெருக்கடிக்கான காரணிகளை அடையாளப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மனிதர்களால் திட்டமிடப்பட்டு உருவாக்கப்படும் நெருக்கடிகளை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. மேலாண்மை வகைகளை விவரிக்க.

17. மனித உறவுகள் மேலாண்மை குறித்து எடுத்துரைக்க.

18. ஆளுமைப் பண்பு மேம்படுவதற்கான வழிமுறைகளை அடையாளப்படுத்துக.

19. தலைமைப் பண்பின் தகுதிகளை வரையறுக்க.

20. நெருக்கடி மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

———————

| S–2150 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA1S1 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

## First Semester

## தமிழ்

## பேச்சுக்கலைத்திறன்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. தனி மனிதன் தான் வாழும் சமூகத்துடன் தொடர்பு கொள்வற்கு மிக இன்றியமையாதது எது?

2. பேச்சுக்கலை என்பது யாது?

3. சொற்பொழிவு நிகழ்ச்சியில் முதல் கூறாக இடம்பெறும் உரை எது?

4. நின்று பெய்யும் மழையைப் போல் பேசும் சொற்பொழிவாளர் யார்?

5. விவேகானந்தர் அமெரிக்காவில் எந்த நகரத்தில் சொற்பொழிவு நிகழ்த்தினார்?

6. பேச்சின் உள்ளடக்கமும், பேச்சுநடையும் எதைப் போன்றது?

7. ‘சொல்லின் செல்வர்’ என்று அழைக்கப்படுபவர் யார் ?

8. சிறந்த பேச்சாளர் என்பவர் யார்?

9. பேசுவதற்கு முன் நாம் எதைத் தயார்படுத்த வேண்டும்?

10. பேச்சாற்றலில் சிகரம் போன்றவர் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) 'சொற்பொழிவு ஓர் அரிய கலை' – நிறுவுக.

(அல்லது)

(ஆ) சொற்பொழிவில் இலக்கிய அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

12. (அ) சமயச் சொற்பொழிவுகள் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) அரசியல் சொற்பொழிவு குறித்து எழுதுக.

13. (அ) அண்ணாவின் சொற்பொழிவை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) தென்கச்சி சுவாமிநாதனின் சொற்பொழிவாற்றலை விவரிக்க.

14. (அ) சொற்பொழிவுத் திறன்களில் அவையறிந்து பேசும் திறன் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) சொற்பொழிவில் மொழி ஆளுமை குறித்து விவரிக்க.

15. (அ) பேசுவதற்குரிய தயார்நிலையைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) அனுபவம் மிகுந்த பேச்சாளரின் பேச்சுத்திறனைக் கண்டறிக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. பேச்சாளருக்குரிய தகுதிகளை வரிசைப்படுத்துக.

17. சொற்பொழிவின் வகைகளைப் பட்டியலிடுக.

18. சொற்பொழிவுத் திறன்களில் சொல் தெரிவு, வெளிப்பாட்டுத்திறன் குறித்து ஆய்க.

19. புகழ்பெற்ற சொற்பொழிவாளர்களை வரிசைப்படுத்துக.

20. பொழிவுத் தயாரிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க.

———————

**S–2151**

**Sub. Code**
**23BTA1FC**

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2026.

### First Semester

### தமிழ்

### தமிழில் சிறார் இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிருவரிகளில் விடையளிக்க.

1. தமிழில் சிறார் இலக்கியத்தின் முன்னோடி யார்

2. சிறார் இலக்கிய வகைகளுள் இரண்டனைக் கூறுக.

3. யூமா வாசுகியின் எந்நூல் பால புரஸ்கார் விருது பெற்றது?

4. இரா. நடராசன் எவ்வாறு ஆயிஷா நடராசன் ஆனார்?

5. சிறார் நாடகத்திற்கான உத்திகளை எழுதுக.

6. சிறார் இலக்கியப்படைப்புகளில் மொழிநடை எவ்வாறு இருக்க வேண்டும்?

7. ‘விஞ்ஞான விக்கிரமாதித்தன் கதைகள்’ பெற்ற விருது குறித்தெழுதுக.

8. ஒரு லட்சத்திற்கும் மேல் விற்கப்பட்ட ஆயிஷா நடராசனின் படைப்பு எது?

9. ‘பொன்னியின் தியாகம்’ நாடகத்தின் ஆசிரியர் யார்?

10. ‘ஆலிஸின் பூத உலகம்’ நூலின் மொழிபெயர்ப்பாளர் பெயரினைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சிறார் இலக்கிய வகைகளுள் கவிதையின் சிறப்பியல்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) அறிவியல் சார்ந்த படைப்புகள் குழந்தைகளுக்கு உதவும் விதத்தினை எடுத்துரைக்க

12. (அ) பெ.தூரனின் படைப்புகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) அழ. வள்ளியப்பா சிறார் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியத் தொண்டினை எழுதுக.

13. (அ) சிறார் இலக்கியத்தின் பண்புகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பிற இலக்கிய வகைமைகளிலிருந்து சிறார் இலக்கியம் எங்ஙனம் வேறுபடுகிறது?

14. (அ) பூவண்ணனின் கவிதையின் உள்ளடகத்தை நும் பாடப்பகுதி வழி விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) ஆழ்கடல் - சூழலும் வாழிடங்களும்' படைப்பில் இடம்பெறும் உத்திகளைச் சான்றுகளுடன் எடுத்தியம்புக.

15. (அ) 'பொன்னியின் தியாகம்' நாடகம் சிறார்களுக்கும் எடுத்துரைக்கும் செய்தியினைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'கனவுகளும் கற்பனைகளும் தேவை' என்பதனை ஆலிஸின் பூதஉலகம் வழி அரண் செய்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளிக்க.

16. சிறார் இலக்கியங்களின் கற்பனைத் திறம் பயன்படுத்துவதற்கானக் காரணங்களை ஆய்க.

17. சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களுள் இருவர் குறித்து விவரித்தெழுதுக.

18. தமிழில் சிறார் இலக்கியப் படைப்புகளின் மொழிநடை மற்றும் உத்திகள் குறித்தெழுதுக.

19. 'விஞ்ஞான விக்கிரமாதித்தின் கதைகள்' - திறனாய்வு செய்க.

20. 'ஆலிஸின் பூத உலகமும், சிறார் உளவியலும்' குறித்துக் கட்டுரைக்க.

———————

| S–2152 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

### Second Semester

### தமிழ்

### அற இலக்கியம்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours　　　　　　　　Maximum : 75 Marks

**பகுதி அ**　　　　　　$(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்கவும்.

1. நாலடியார் நூல் குறிப்புத் தருக.

2. முதுமொழிக் காஞ்சி கூறும் சிறந்தவைகளைப் பட்டியலிடுக.

3. இன்னா நாற்பது - வரையறுக்க.

4. ஒழுக்கம் தவறாதவர் பெறும் பேறுகள் எவை?

5. திரிகடுகம் பெயர்க்காரணம் தருக.

6. அருள் உள்ளவன் எவற்றைச் செய்யமாட்டான்?

7. விநாயகரிடம் ஔவையார் வேண்டுவன யாவை?

8. 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' - விளக்கம் தருக.

9. குமரகுருபரர் கூறும் கல்வியின் சிறப்பினை எழுதுக.

10. அறநெறிச்சாரம் - குறிப்பு வரைக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) செல்வம் நிலையாமை குறித்து நாலடியார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) பழமொழி நானூறு கூறும் கல்வியின் சிறப்புக்களை வகைப்படுத்துக.

12. (அ) தனிமனித வாழ்விற்குத் துன்பம் தருவனவாக கபிலர் கூறுவனவற்றைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) ஆசாரக் கோவை உணர்த்தும் தனி மனித ஒழுக்கங்களை அடையாளப்படுத்துக.

13. (அ) சிறுபஞ்சமூலம் கூறும் அறக்கருத்துக்களை வரிசைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ஏலாதி சுட்டும் நற்குணத்தாரின் பண்புகளைப் பகுத்தாய்க.

14. (அ) ஔவையார் மனித வாழ்விற்குக் கூறும் நல்வழிகளைக் கண்டறிக.

(அல்லது)

(ஆ) கல்வியின் மேன்மைகளாக வெற்றிவேட்கை கூறுவனவற்றை விளக்குக.

15. (அ) உலகநீதி வெளிப்படுத்தும் மெய்க்கருத்துக்களை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) அறநெறிச்சாரம் சமூகத்திற்கு வகுத்துள்ள நல்லறங்களைக் கட்டமைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. இல்வாழ்வானின் கடமைகளாக வள்ளுவர் கூறும் கருத்துக்கள் தற்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைக் கட்டமைக்க.

17. தனி மனித வாழ்விற்கு இன்பம் தருவனவற்றைப் பகுத்தாய்க.

18. "மனநோயைப் போக்கும் மருந்து போன்ற நீதிக் கருத்துக்களைக் கூறுவது திரிகடுகம்" - எனும் கூற்றை நிறுவுக.

19. ஔவையாரின் படைப்புத்திறன் மூதுரையில் வெளிப்படும் விதத்தை ஆராய்க.

20. கற்றோரின் மேன்மைகளாக நீதிநெறி விளக்கம் கூறுவனவற்றை அட்டவணைப்படுத்துக.

| S–2153 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2C2 |

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

## Second Semester

## தமிழ்

## தமிழ் இலக்கிய வரலாறு

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் நூலினைக் கூறுக.

2. பதினெண்கீழ்கணக்கு நூல்களில் புறம் சார்ந்த நூல் எது.

3. பக்தி இலக்கியக் காலக்கட்டத்தைக் கூறுக.

4. 'தொண்டர் சீர் பரவுவார்' - யார்?

5. பரணி குறிப்பு வரைக.

6. நாலாயிர திவ்யபிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?

7. 'தமிழ் உபநிடதங்கள்' என்று அழைக்கப்படுவது எது?

8. வள்ளலார் தோற்றுவித்த சங்கத்தினைக் கூறுக.

9. 'நாடகம்' - குறிப்பு வரைக.

10. நாட்டுப்புறஇயல் ஆய்வில் இன்றியமையாதது எது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) செவ்வியல் இலக்கியங்களின் சிறப்புகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகாரக் காப்பிய அமைப்பு, சிறப்புகளை எடுத்துரைக்க.

12. (அ) பௌத்த காப்பியங்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) மகாபாரதத்தின் தனித்தன்மைகளை அடையாளப்படுத்துக.

13. (அ) சைவத் தத்துவ நூல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வைணவத் தத்துவங்கள் குறித்து விளக்குக.

14. (அ) அருணகிரிநாதரின் படைப்புக்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) உரைநடை இலக்கியங்கள் பற்றி எடுத்துரைக்க.

15. (அ) மரபுக்கவிதை பற்றி விவரிக்க.

(அல்லது)

(ஆ) புதுக்கவிதை தோற்றம் வளர்ச்சியினை விளக்கியுரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளி.

16. சங்க இலக்கியங்களின் சிறப்புகளை ஆய்ந்துரைக்க.

17. கம்பரின் கவித்திறனை கம்பராமாயணம் வழி நிறுவுக.

18. உரைநடை வளர்ச்சியில் உரையாசிரியர்களின் பங்களிப்பை எடுத்துரைக்க.

19. இஸ்லாம், கிறித்துவ இலக்கியங்கள் பற்றிக் கட்டுரைக்க.

20. சிறுகதையின் வளர்ச்சிப் போக்கினை ஆய்க.

———————

| S–2154 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA3 |

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2026

## தமிழ்

## இயைபுப்பாடம் – கலைஞரின் தமிழ்ப்பணியும், சமூகப்பணியும்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

### பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. கலைஞர் கருணாநிதியின் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டினைக் குறிப்பிடுக.

2. கலைஞர் மு. கருணாநிதிக்கு ‘கலைஞர்’ பட்டம் யாரால், எதற்காகக் கொடுக்கப்பட்டது?

3. சங்கிலிச்சாமியார் என பெயர்வரக் காரணம் என்ன?

4. ‘பொன்னர் சங்கர்’ கதை எந்த இதழில் தொடர்கதையாக வந்தது?

5. மந்திரி குமாரி நாடகத்தின் இரு கதாப்பாத்திரங்கள் பெயரினைக் குறிப்பிடுக.

6. ‘மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி’ – விளக்குக.

7. ‘தமிழர் படை’ – குறிப்பு வரைக.

8. ‘தமிழ்நாடு’ எனப் பெயரிட்டவர் யார்?

9. ‘கை ரிக்சா ஒழிப்புத் திட்டம்’ குறித்தெழுதுக.

10. விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் இரண்டனைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் **ஒருபக்க** அளவில் விடையளிக்கவும்.

11. (அ) 'முரசொலி' – இதழ் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 'கல்லக்குடி ஆர்ப்பாட்டம்' – பற்றி விவரி.

12. (அ) 'பொன்னர் சங்கர்' கதைக்களப் பின்னணிக் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சங்கிலிச்சாமியார் சிறுகதையில் காணலாகும் மூடநம்பிக்கைகளை எழுதுக.

13. (அ) 'சட்டமன்ற நாயகர் கருணாநிதி' என ஏ. எஸ். பன்னீர் செல்வன் கூறுவதற்கான காரணங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) "கலைகளிலே அவர் கதை வசனம்!" என கலாப்பிரியா புகழ்வதன் காரணத்தைப் புலப்படுத்துக.

14. (அ) மொழிப்போரில் உயிரிழந்த தியாகிகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) முதலாம் இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு குறித்து எழுதுக.

15. (அ) கலைஞரின் திட்டங்களுள் பெண்களுக்கான நலத்திட்டங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) இட ஒதுக்கீடு கொள்கையினை விவரிக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. கலைஞரின் படைப்புகள் குறித்துக் கட்டுரைக்க.

17. 'பொன்னர்-சங்கர்' புதினத்தைத் திறனாய்வு செய்க.

18. "கூர்மையான அரசியல் உரைநடை – மந்திரிகுமாரி நாடகம்" – எனும் கூற்றை நிறுவுக.

19. கலைஞரின் மொழிப்போராட்டங்கள் பற்றித் தொகுத்துரைக்க.

20. 'சட்டமன்றம் முதல் சமூக மேம்பாடு வரை' கலைஞரின் பணிகளை விளக்கியுரைக்க.

S–2155

Sub. Code
23BTAA4

## U.G. DEGREE EXAMINATION, APRIL 2026

### தமிழ்

### இயைபுப்பாடம் : சுவடியியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு தொடரில் விடையளி.

1. பனை ஓலை சுவடிகள் பயன்பாட்டில் வந்த காலம் குறித்து எழுதுக.

2. எழுத்தாணியின் பயன்களை வகைப்படுத்துக.

3. சுவடிப்பதிவு வரையறு.

4. கூட்டெழுத்துக்கள் என்றால் என்ன?

5. மூலப்பாடத் திறனாய்வுக் குறித்து எழுதுக.

6. யாப்பு என்றால் என்ன?

7. சுவடிக் காப்பில் அரசு நிறுவனங்களின் பங்கினை எழுதுக.

8. தனியார் சுவடித் தொகுப்புகள் குறித்து எழுதுக.

9. இராசாயன பாதுகாப்பு முறைகள் என்றால் என்ன?

10. சுவடி ஆப்ஸ் வரையறு.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) சுவடிகளின் வகைகளை எழுதி விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவடி எழுத்து முறையின் சிறப்பினை விவரி.

12. (அ) சுவடிசேகரிப்பில் பயன்படும் அட்டவணைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சுவடி விளக்க அட்டவணையின் அமைப்பை விளக்குக.

13. (அ) சுவடிப்பதிப்பின் முக்கியத்துவத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) சுவடிகளை நூலாக்கும் முறைகளை எழுதுக.

14. (அ) அரசு நிறுவனங்களின் சுவடிப் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தனியார் நிறுவனங்களின் சுவடித் தொகுப்பு முறையினை விவரி.

15. (அ) பண்டைய சுவடிப்பாதுகாப்பு முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுவடிகள் – பழுது நீக்கும் முறைகளைக் குறிப்பிடுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.

16. தமிழ் இலக்கியத் தொகுப்புகளில் சுவடிகளின் பங்களிப்பை விரித்துரைக்க.

17. சுவடிகளில் எழுதப்பட்டுள்ள குறியீடுகள் தமிழெண்கள் வெளிப்படும் முறைகளை கட்டுரைக்க.

18. சுவடிப்பதிப்பில் யாப்பின் தேவை மற்றும் பயன்பாட்டை விரிவாக எழுதுக.

19. தமிழகத்திலுள்ள சுவடிக் காப்பகங்களின் பங்களிப்பை விவரிக்க.

20. சுவடி ஆப்ஸ்களின் பயன்பாடும் சுவடிக்காப்பில் அவை அளிக்கும் பங்களிப்பு குறித்து விரிவாக எழுதுக.

———————

| S–2156 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTAA5 |

**U.G. DEGREE EXAMINATION, APRIL 2026**

**தமிழ்**

**இயைபுப் பாடம் – நாடகவியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. தமிழ் நாடகத்தின் தலைமை ஆசிரியர் யார்? சிறப்பினைத் தருக.

2. 'நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும்' – இத்தொடர் எந்நூலில் காணப்படுகிறது.

3. மனோன்மணீயம் என்னும் நாடகத்தை இயற்றியவர் யார்? – குறிப்பு வரைக.

4. தமிழில் தோன்றிய முதல் சமூகச் சீர்திருத்த நாடகம் எது? சிறப்புகள் யாவை?

5. துன்பியல் நாடகம் என்றால் என்ன?

6. அங்கத நாடகம் என்று எதனை அழைப்பர்? ஏன்?

7. வரலாற்று நாடகங்கள் இரண்டினைக் கூறுக.

8. ஓரங்க நாடகம் குறிப்புத் தருக.

9. நவீன நடிப்புக்கலை ஆசான் யார்? விளக்கம் தருக.

10. 'அபிமன்பு சுந்தரி' எந்த நாடக வகையைச் சார்ந்தது? ஏன்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) தமிழ் நாடகத்தின் தொன்மை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) 20-ம் நூற்றாண்டில் தோன்றிய நாடகங்களை விளக்குக.

12. (அ) அறிஞர் அண்ணா நாடகத்திற்கு ஆற்றிய பங்களிப்பினை விவரி.

(அல்லது)

(ஆ) நாடகக் கலையின் இன்றைய நிலை பற்றி எழுதுக.

13. (அ) நாடகத்தின் வளர்ச்சி பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) நாடகத்தின் பயன்களைப் புலப்படுத்துக.

14. (அ) மொழிபெயர்ப்பு நாடகங்களை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) வானொலி நாடகங்கள் மூலம் நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

15. (அ) இசை நாடகங்களின் போக்கினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) ‘போதை ஒழிப்பு’ குறித்து பிரச்சார நாடகம் ஒன்றினை எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எதேனும் மூன்று வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடையளிக்கவும்.

16. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து கட்டுரை வரைக.

17. தற்காலத்து நாடக ஆசிரியர்களைத் தொகுத்தெழுதுக.

18. நாடகத்தின் அமைப்பும் வளர்ச்சியும் குறித்தெழுதுக.

19. ஓரங்க நாடகத்தின் வளர்ச்சி குறித்து ஆய்க.

20. நாடக ஆசிரியராக உருவாகுவதற்கு உரிய தகுதிகளை எடுத்துரைக்க.

———————

| S–2157 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA2S1 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

### Second Semester

தமிழ்

ஊடகவியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours                                                  Maximum : 75 Marks

**பகுதி அ**                                                  (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளி.

1. ஊடகம் என்றால் என்ன?

2. மரபு சார்ந்த ஊடங்கள் ஏதேனும்  இரண்டினைக் கூறுக.

3. தமிழ் வார இதழ்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

4. நாளிதழ்கள் பற்றிக் குறிப்பு வரைக.

5. உலகிலுள்ள அனைத்து வானொலி நிலையங்களுக்கும் தலைமைச் செயலகம் எங்குள்ளது?

6. தகவல் தொடர்பு ஊடகங்களில், மக்களிடத்தில் அதிக செல்வாக்குப் பெற்றுள்ள ஊடகத்தினைக் கூறுக.

7. தமிழின் முதல்வண்ணத் திரைப்படம் எது?

8. சென்னையில் முதல் நகரும் படக்காட்சியைத் திரையிட்டுக் காட்டியவர் யார்?

9. முகநூல் என்பது யாது?

10. இணைய தளங்கள் குறித்துக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) ஊடக வரலாறு பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஊடகங்களில் தமிழ்பெறுமிடத்தைச் சுட்டிக்காட்டுக.

12. (அ) தமிழ் மாத இதழ்களை அடையாளப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழ் வார இதழ்களின் போக்குகளை ஆய்க.

13. (அ) தொலைக்காட்சித் தொடர்கள் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) பண்பலை நாடகங்கள் குறித்து விவரிக்க.

14. (அ) திரைப்பட தொழில்நுட்ப வல்லுநர்களின் பணியை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திரைப்படங்களில் இன்றையப் படங்களின் நிலையினை மதிப்பிடுக.

15. (அ) திரைக்கதைக் காட்சி உருவாக்கம் பற்றி எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சமூக வலைதளங்கள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

16. ஊடக வகைகள் பற்றிக் கட்டுரைக்க.

17. செய்திகளை மக்களுக்குச் சேர்ப்பதில் நாளிதழ்களின் பங்களிப்பினை விளக்குக.

18. வானொலியின் தோற்றம் வளர்ச்சி குறித்து விவரிக்க.

19. திரைப்பட வரலாற்றினை விளக்கிவுரைக்க.

20. தமிழ் இணைய இதழ்களைப் பட்டியலிடுக.

**S–2158**

| Sub. Code |
|---|
| 23BTA2S2 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2026.**

**Second Semester**

**தமிழ்**

**அறிவியல் தமிழ்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளி.

1. அறிவியல் தமிழ் விளக்கம் தருக.

2. 'வலவன் ஏவா வானவூர்தி' – எனும் புறநானூற்று அடிகள் உணர்த்தும் அறிவியல் செய்தியினை எழுதுக.

3. தமிழில் சிறுவர்களுக்கான அறிவியல் இதழ்கள் இரண்டன் பெயரினைக் குறிப்பிடுக.

4. சிறார்களுக்கென எழுதும் எழுத்தாளர் இருவர் பெயரினைத் தருக.

5. 'அறிவியல் களஞ்சியம்' என்றால் என்ன?

6. இணையான கலைச்சொற்கள் தருக.

   (அ) Laboratory

   (ஆ) Management.

7. நீவிர் அறிந்த 'தமிழ் வலைப்பூ' பற்றி குறிப்பிடுக.

8. தகவல் தொழில் நுட்பத்தின் உதவியால் தமிழ்மொழி அடைந்த வளர்ச்சிகளுள் இரண்டு குறித்தியம்புக.

9. 'சுதேசி அறிவியல் இயக்கம்' - குறிப்பு வரைக.

10. தமிழக அறிவியல் பேரவையின் பணிகள் யாவை?

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.

11. (அ) தமிழ் மொழி வளர்ச்சியில் அறிவியல் தமிழ் ஆற்றி வரும் பணிகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பழந்தமிழரின் வானியல் அறிவினைப் புலப்படுத்துக.

12. (அ) 'துளிர்' - இதழின் பணிகள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அறிவியல் தமிழ் வளர்ச்சிக்குப் பின் தமிழ் ஆய்வுக்களங்கள் விரிவடைந்துள்ளமையைச் சான்றுடன் விவரித்துரைக்க.

13. (அ) உமக்குத் தெரிந்த அறிவியல் கலைச் சொற்கள் ஐந்தனை எழுதுக.

(அல்லது)

(ஆ) அறிவியல் அகராதிகளில் அறிவியல் தமிழின் நிலைப்பாட்டினை எடுத்துரைக்க.

14. (அ) நீவிர் அறிந்த மின்புல ஆய்விதழ் இரண்டன் பணிகள் குறித்துக் கருத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'ஒலி-ஒளி நாடாக்கள் தமிழ் மொழியின் வளர்ச்சியினை எல்லை தாண்டி பரவச் செய்கின்றன' - எனும் கூற்று சரியா? விளக்கம் தருக.

15. (அ) தமிழ் வளர்ச்சிக்குப் பகுத்தறிவு இயக்கங்களின் செயற்பாடுகள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் பணிகளைப் பட்டியலிடுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளி.

16. அறிவியல் தமிழின் தோற்றம் வளர்ச்சி குறித்துத் தொகுத்துரைக்க.

17. அறிவியல் தமிழ் வளர்ச்சியில் பெரியோருக்கான அறிவியல் இதழ்களின் பங்களிப்பை விவரிக்க.

18. தமிழில் அறிவியல் கலைச்சொற்களின் தேவையும், வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

19. நீவிர் அறிந்த ஏதேனும் ஓர் இணையதளத்தின் தமிழ்ப்பணி குறித்துத் தொகுத்துரைக்க.

20. இயக்கங்களால் அறிவியல் தமிழ் வளர்ந்துள்ளதா? ஆய்க.

| S–2161 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA3S1 |

**B.A. DEGREE EXAMINATION, APRIL 2026.**

**Third Semester**

**தமிழ்**

**மொழிபெயர்ப்பியல்**

**(CBCS – 2023 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. 2024 ஆண்டின் மொழிபெயர்ப்பிற்கான சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் எது?

2. இலக்கிய மொழிபெயர்ப்பின் இரு பயன்களைக் குறிப்பிடுக.

3. லத்தீன் மொழியில் வீரமாமுனிவரால் மொழிபெயர்க்கப்பட்ட நூலினைக் குறிப்பிடுக.

4. "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ" - நூற்பா இடம்பெற்ற நூல் யாது?

5. 'Water falls' என்பதன் நேர் மொழிபெயர்ப்பு மற்றும் சரியான மொழிபெயர்ப்பினைத் தருக.

6. இணையான பழமொழியினைத் தருக.

   'He turned a deaf ear to my advice'.

7. மூல நூல் அறிமுகம் செய்வதன் தேவையை எழுதுக.

8. ‘விளக்கங்கள்' இடம் பெறுவதன் இன்றியமையாமையை எழுதுக.

9. ‘கிழமைப் பட வாழ்' என்பதன் பொருத்தமான மொழிபெயர்ப்பு தருக.

10. ஆஜர், வருஷம் என்றும் பழைய வழக்குச் சொற்களுக்கு இணையான புதிய வழக்குச் சொற்களைக் குறிப்பிடுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) இலக்கிய மொழிபெயர்ப்பின் தன்மைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்கும் பணியில் ஏற்படும் சிக்கல்களைத் தெளிவுறுத்துக.

12. (அ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இலக்கியங்களின் வளர்ச்சி நிலையினைச் சுருக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) தற்காலத்தில் மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையை விளக்கியுரைக்க.

13. (அ) தழுவல் முறையில் அமைந்த தமிழ் இலக்கியங்களைச் சான்றுகளுடன் வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கணினி மொழிபெயர்ப்பு குறித்து எடுத்துரைக்க.

14. (அ) மொழிபெயர்ப்பாளர் உரிமை மற்றும் கடமை குறித்து விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்ப்பாளர் தகுதிகளை விரித்தெழுதுக.

15. (அ) அறிவியல் துறையில் பயன்படுத்தப்படும் ஆங்கிலச் சொற்களுக்கு இணையான கலைச்சொற்களை எழுதி விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) சட்டத்துறையில் இடம் பெற்றுள்ள ஐந்து கலைச்சொற்களை எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் விரிவான விடையளிக்க.

16. மொழிபெயர்ப்பின் நோக்கம் மற்றும் பயன்பாடுகள் குறித்துக் கட்டுரைக்க.

17. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் மொழிபெயர்ப்பு இலக்கியங்களின் தாக்கத்தைத் தொகுத்துரைக்க.

18. மொழிபெயர்ப்பின் வகைகளை எடுத்துரைத்து எவையேனும் இரண்டினைக் குறித்து விளக்கம் தருக.

19. மொழிபெயர்ப்புக் கொள்கைகள் பின்பற்ற வேண்டியதன் இன்றியமையாமையை ஆய்ந்துரைக்க.

20. கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழியைத் தமிழில் மொழிபெயர்க்க.

(அ) Self help is the best help.

(ஆ) Laughter is the best medicine.

(இ) After a storm comes a calm.

(ஈ) Knowledge is power.

(உ) Diamond cuts diamond.

(ஊ) Even hunger wont make tiger eat grass.

(எ) Look before you leap.

(ஏ) Face is the index of the mind.

(ஐ) Empty vessels make the most noise.

(ஒ) Even the mighty do slip.

---

| S–2162 |
|---|

| Sub. Code |
|---|
| 23BTA3S2 |

## B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

### Third Semester

தமிழ்

சுற்றுலாவியல்

### (CBCS – 2023 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. பயணிகள் அளவிடும் முறைக் குறித்தெழுதுக.

2. சுற்றுலாவைத் தூண்டும் காரணிகள் எவை?

3. மார்க்கோபோலோ எந்நாட்டைச் சேர்ந்தவர்?

4. பாகியான் யாருடைய காலத்தில் இந்தியா வந்தார்?

5. சுற்றுலாத்துறையில் உள்ள தடைகள் எவை?

6. சுற்றுலாக்கிராமங்கள் என்றால் என்ன?

7. தமிழகத்தில் குடைவரைக் கோயில் உள்ள இடங்கள் இரண்டினைச் சுட்டுக.

8. பழந்தமிழர் கட்டடக்கலைக்குக் சான்று தருக.

9. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குறிப்பு எழுதுக.

10. சுற்றுலா தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சுற்றுலாவின் நோக்கங்களை - எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) சுற்றுலா அமைப்பாளர்களின் பணிகள் குறித்தெழுதுக.

12. (அ) மார்க்கோபோலோ மேற்கொண்ட பயணங்கள் மற்றும் குறிப்புகள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாகியான் குறிப்புகள் வழி அறியலாகும் செய்திகளை விவரி.

13. (அ) சுற்றுலாவின் வளர்ச்சியின் விளம்பரத்தின் பங்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) விடுதிகளின் வகைகள் குறித்து விவரித்துரைக்க.

14. (அ) 'சிற்பக்கலையின் மகுடம் மாமல்லபுரம்' – நிறுவுக.

(அல்லது)

(ஆ) சித்தன்னவாசல் ஓவியம் வழி அறியப்படும் செய்திகளை எடுத்துரைக்க.

15. (அ) தமிழகத்தின் சுற்றுலாத்தளங்களின் நிலைப்பாட்டினை வகைப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தமிழகத்தின் வனவிலங்கு உய்விடம் மற்றும் பறவைகள் சரணாலயம் குறித்தெழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விரிவான விடையளிக்க.

16. சுற்றுலா வழிகாட்டிகளின் பண்புகள் மற்றும் பணிகள் குறித்துத் தெளிவுறுத்துக.

17. பண்டைக்காலச் சுற்றுலாப்பயணிகள் வழி அறியலாகும் வரலாற்றுச் செய்திகளைத் தெளிவுறுத்துக.

18. 'சுற்றுலா அறிவு வளர்ச்ச்சிக்கு வித்திடுகிறது' – கருத்துரைக்க.

19. தஞ்சைப்பெரியகோவிலின் சிறப்புகளை விவரித் தெழுதுக.

20. தமிழகச் சுற்றுலாத்துறையின் செயல்பாடுகள் குறித்துக் கட்டுரைக்க.

**S–2163**

**Sub. Code**
**23BTA4C1**

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

## Fourth Semester

## தமிழ்

## பக்தி இலக்கியம்

## (CBCS – 2023 onwards)

Time : 3 Hours | Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. "வேயுறு தோளி பங்கன்" யார்?

2. "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" - என்று மாணிக்கவாசகர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

3. திருவேங்கடமலையில் மீனாகப்பிறக்க விரும்பிய ஆழ்வார் யார்?

4. திருமங்கை ஆழ்வார் எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர்?

5. இரட்சண்ய மனோகரப் பாடல்களின் பெரும்பகுதி எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டது?

6. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயரினைக் கூறுக.

7. "அழகிய மணவாளதாசர்" என்று அழைக்கப்படுபவர் யார்?

8. நம்மாழ்வார் பிறந்த ஊரினைக் கூறுக.

9. சென்ம இராக்கினி மாதாவின் செயலைக் குறிப்பிடுக.

10. செஞ்சிக்கோட்டையினை முற்றுகையிட்ட வரலாறு கூறப்படும் நாடகத்தின் பெயர் என்ன?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) நாவுக்கரசர் சிவன் மீது கொண்ட பக்தித்திறத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) மாணிக்கவாசகரின் பக்தித் திறத்தை பிடித்த பத்து வழி தெளிவுபடுத்துக.

12. (அ) குலசேகர ஆழ்வார் திருமாலிடம் வேண்டுவனவற்றை விவரிக்க.

(அல்லது)

(ஆ) திருமங்கையாழ்வார் திருமாலைக்கண்ட காட்சியினை எடுத்துரைக்க.

13. (அ) இரட்சண்ய மனோகரம் கூறும் விசுவாசக் காட்சியை விவரிக்க.

(அல்லது)

(ஆ) குணங்குடியாரின் தொழுகைச் சிறப்பைப் புலப்படுத்துக.

14. (அ) திருவரங்கக் கலம்பக அமைப்பையும், சிறப்பையும் எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தலைவி தலைவனிடம் மேகத்தைத் தூதுவிடும் முறையை விளக்குக.

15. (அ) தேவமாதாவிடம் வேதநாயகம் பிள்ளை வேண்டுவன யாவை?

(அல்லது)

(ஆ) வேதநாயகம் பிள்ளையின் படைப்பும், பணியும் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விரிவான விடை தருக.

16. கோளறு பதிகச் சிறப்பை சம்பந்தர் பாடல்வழி விளக்குக.

17. ஆண்டாள் கண்ட கனவினை நாச்சியார் திருமொழி வழி மதிப்பிடுக.

18. ரகுமான் கண்ணியின் சிறப்பைக் கட்டுரைக்க.

19. கம்பர் நம்மாழ்வாரைப் போற்றும் திறத்தை சடகோபர் அந்தாதி வழி விவரிக்க.

20. சீதக்காதி நொண்டி நாடகம் பற்றி எடுத்துரைக்க.

———————

**S–2164**

**Sub. Code**
**23BTA4C2**

# B.A. DEGREE EXAMINATION, APRIL 2026

